ஸ்ரீ குருப்யோநமா
ஹரி: ஓம்.

நந்தி கருட ஸம்வாத ஞான ஸாரானுபவம்.

ஸ்ரீ குரு ஸ்வாமிகளின் சிஷ்யனால் எழுதப்பட்டு
பண்டிதர்களால் பரிசோதிக்கப்பட்டது

காபீரயிட்டு.

புரோகிரசிவ் பிரஸ்,
மதராஸ்.

1916

உ
கடவுள் துணை.

நாம் இவ்வுலகில் பிறந்ததுமுதல் இறப்பதற்குள் ஏதாவது ஓர் காரியத்தைச் செய்ய ஸங்கல்பம் செய்துகொண்டோமேயானல் அக்காரியம் தடையில்லாமல் முடிவதற்காக ஆரம்பத்தில் விநாயகரை வணங்குவது மிகவும் அவசியமானதால் அது வருமாறு:

ஸ்லோகம் || சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம் ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வவிக்ஞேப சாந்தயே.

குருப்ரம்மா குருர்விஷ்ணூர்க் குருர்தேவோ மஹேச்வர: குருஸ்ஸாக்ஷாத் பரம்ப்ரம்ம தஸ்மைஸ்ரீகுரவே நம:

ஸர்வ விக்னஹரம் தேவம் ஸர்வவிக்ன விவர்ஜிதம் ஸர்வஸித்தி ப்ரதாதா ரம் வந்தேஹம் கணநாயகம்.

ஸரஸ்வதீத்வியம் த்ருஷடா வீணுபுஸ்தகதாரணீ ஹம்ஸவாஹ ஸமிர்யுக்தா வித்யாதான கர்மம.

முதலில் பராதீயென்றும், பிறகு ஸரஸ்வதீ, சாரதா தேவி, ஹம்ஸவாஹிநீ, ஜகதீஸ்வரி. வாணி, கௌமாரீ, ப்ரம்மசாரிணீ, புத்திதாத்ரீ, வரதாயினீ க்ஷுத்ரகண்டா புவநேஸ்வரீ, ப்ராம்ஹீ யென்னும் நாமங்களால் கலைமகளாகிய லோகமாதாவைப் போற்றுகின்றேன்.

நந்தி கருட ஸம்வாத ஞான ஸாரம்.

முன்னொரு காலத்தில் திருமால் சிவபிராஜனக் காணும் பொருட்டு கைஜலயிக்கு வந்தனர். அவருடைய வாஹனமாகிய கருடாள்வார் சிவன் வாஹனமாகிய நந்திகேசரைக் கீழும் மேலும் பார்த்து, மிகவுங் கர்வத்துடன் சொன்னதாவது, நந்தீ! நீ பிச்சையெடுப்பவன் வாஹனமல்லவா! உனக்குப் பலமாவது வீரமாவதேது' என்பது. அதைக்கேட்ட நந்தீஸ்வரர் அதிக கோபங்கொண்டு கருடன்மேல் பெருமூச்சு விட்டனன். அம்மூச்சின் வேகத்திஞல் கருடன் நூறு யோஜஜனகளுக்கப்பால் கொண்டுபோ யெறியப்பட்டும் மறுபடியும் நந்தி சுவாஸத்தை உள்ளுக்கிழுக்கும் பொழுது அவரருகில் கொண்டுவரப்பட்டும், ஊஞ்சலாடிக்கொண்டு தவித்துக் கொண்டிருந்தார். இவ்வவஸ்தையைப் பொருக்கமுடியாத கருடபகவான் 'யக்ஞேசா! அச்சுதா! கோவிந்தா! மாதவா! அநந்தா) கேசவா! க்ருஷ்ணு! விஷ்ணு! ஹ்ருஷிகேசா! வாஸுதேவா! கோபீநாதா! நாரஸிம்ஹா! என்று பலவாறுய் மாதவஜன யழைத்து, நான் அறியாமையால், செய்த அபசாரத்தின் பயணுக இவ்வாறு தபித்துக் கொண்டிருக்கிறேன். கருஜணகொண்டென்ஜனக் காப்பாற்றுவாயாகவென் றழுதனன். பக்ஷிராஜனுடைய ரோதனத்தைக்கேட்ட நாராயணன், சிவன் அனுமதிகொண்டு வெளி வந்து, கருடனுக்கு நேர்த்த விஷயத்தைக்கேட்டறிந்து, நந்தியினருகில் வந்து, நங்திகேசுரரே! கருடன் மதியின்றையால் செய்த குற்றம் பொருத்து அவரை விட்டுவிடும் யென்றுறனர். அதற்கு நந்திதந்த மறுமொழியாவது 'கோவிந்தா! இக்கருடன் சொல்லத்தகாத அவமானத்தை யுண்டாக்கிஞன். ஆகையால் நான் அவரை வதிக்கின்றேன் என்பது இதைக்கேட்டதும் விஷ்ணுவானவர் சிவனிடம் வந்து, நந்திக்கும் கருடனுக்கும் நடந்த வாக்குவாதத்தை யுரைத்தன்ன். அப்பொழுது சிவபிரான், நந்தியை யழைத்து, கருடஜன விட்டுவிடு என்றனர். அதற்கு நந்தி 'சுவாமீ! இக்கருடன் என் முன்னிஜலயிலேயே தங்கஜள யிகழ்ந்துரைத்தஞல் நான் அவஜனக் கொல்லாமல் விடமாட்டேன்' என்றனன். நந்தி இவ்வாதுரைக்கவே தன் வேண்டுகோஜள மீறியதற்காக சங்கரன் நந்தியின்மீது மிகவுங் கோபங்கொண்டு 'நந்தீ! கருடஜன விட்டுவிடு விட்டுவிடு' என்று கட்டஜள யிட்டனர். பிறகு. நந்தி கருடஜன விட்டுவிட்டு தான் ஸர்வேசுவரன் ஆஜணயைக் கடந்ததற்காக மிகவும் மனம் வருந்தி, கைலாசபதியின் பாதங்கள் மேல் விழுந்து, ஹே விஸ்வேஸ்வரா! விரூபாக்ஷ! விஸ்வரூபா! ஸதாசிவா! பூதேசா! கருணுகர! சங்கர! ஹர! மஹாதேவா! அமரவல்லபா! சிவா! ஸர்வாத்மா! நீலகண்டா! ம்ருத்யுஞ்சயா! ருத்ரர! பவ! பவநாசன! பயஹர! சசிசேகர! சம்போ! என்று வெவ்வேறு விதமாய்ப்போற்றி, நான் ஆத்திரத்தால் முதலில் தங்கள் வார்த்தைக்கு மாறுமொழிந்தேன். அதஞல் எனக்கு சொல்லொணு பாபம் வாய்ந்தது. அந்த பாபத்தை அகற்றிக் கொள்ளும் வழி யெனக்குக் காட்டுகயென்றுரைத்தனன். அதற்குப்பரமசிவன் ஹே நந்தி! நீ பூலோகத்திற்குச்சென்று சிவஜன பூசைசெய்க, அதஞல் அந்த தோஷம் நிவாரணமாகிவிடும் என்றனர். (ஸதாகாலமும் சிவனுடையபாதாரவிந்தங்களுக்கு தொண்டுசெய்து காலங்கழிக்கும் நந்திகேசுவரனுக்கு இத்தகைய சிக்ஷை வாய்ந்தாதென்ருல் கேவலமானிடர் செய்யும் அக்ருத்தியங்களுக்கு சிக்ஷையில்லாமற்போகுமா?)

பூலோகத்திற்குப் போகவேண்டுமேயென்று துக்கித்துக்கொண்டிருந்த நந்திகேஸ்வரனுக்குத் தான் இதற்கு முன்னமேயே ப்ரபஞ்சோத்பத்தி, பிண்டோத்பத்தி முதலிய தத்வ விசாரணை செய்திருப்பது நினைவுக்கு வந்து, மறுபடியும் ச்ரவண, மனன, நிதித்யாஸாதிகள் செய்ய வெண்ணி தன் குருவாகிய ஞானாதீத முனிவரிடத்திற்குச் சென்றனன். அம்மகாருஷி குதர்க்கன் முதலிய சிஷ்ய வர்க்கங்களுடன் ஆஸ்ரமத்தில் நிஷ்டையிலிருந்தனர். நந்தி அவரடிகளைப்பணிந்து, தனக்கு சிவனால் கொடுக்கப்பட்ட சாபத்தை யறிவித்து ஸ்வாமின்! இதற்காக நான் செய்யவேண்டிய தேதென்றால், பூலோகத்தில் பிறக்கவேண்டும். அதனால், ப்ரபஞ்சசிருஷ்டி முதலான சந்தேகங்களை நிவர்த்திசெய்துகொள்ளவேண்டும் என்றனன். அம்முனிவர் அதற்கு அதுவுன் விருப்பமாயின், இனி யிவ்விடத்தில் என் சிஷ்யர்களுக்குள் நடக்கும் வாதத்தைக் கவனிப்பாயாக வென்று நந்திக்குரைத்து, பிரபஞ்சோத்பத்தி, பிண்டோத்பத்திகளைக்கழித்து சிஷ்யர்கள் ஒவ்வொருவராக வினா போடவும் அதற்கு மற்றொருவன் பதில் கொடுக்கும்படி யாகவும் சொல்லி, வினா போடுபவர், விடைகொடுப்பவர் என்று இரண்டு வகுப்புகுளாய்ப் பிரித்து வினா விடைகளை நடத்தினர்.

வினா: - ப்ரபஞ்சம் எவ்வாறுண்டாயிற்று? எதற்காக வுண்டாயிற்று?

விடை: - துவக்கத்தில் நிர்விகாராசல பரிபூர்ண ப்ரமமாண்டமிருந்தது. அதனின்று சக்திவுண்டாயிற்று. அந்த சக்தியிலிருந்து ஆகாசமும், ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவினின்று அக்னியும், அக்னியினின்று சலமும், சலத்தினின்று பூமியும், பூமியினின்று ஓஷதிகளும் (ஓஷதியென்றால் மரவகைகள்) பிறந்தன. இது தான் பிரபஞ்சம் (இந்த ஐந்துக்கும் பஞ்சபூதங்களென்று பெயர்.)

வினா: - இப்பஞ்சபூதங்களாகிய பிருதிவி, அப்பு, தேசு, வாயு, ஆகாசம் என்பவற்றினின்று எவை பிறந்தன?

விடை: - அந்த ரிந்திரியங்கள் (அதாவது தேகத்துக்குட் புறத்திலிருக்கும் இந்திரியங்கள்) பிறந்தன. அவையாவன: மனது. புத்தி, சித்தம், அகங்காரம்.

வினா: - அப்படியென்றாலென்ன? அவை யுண்டான வகையெது?

விடை: - ஆகாசத்தில் ஒரு கால்பங்கு ஞாதா வாயியிற்று. மற்றொரு கால்பங்கு, மற்ற நான்கு பூதங்களுடன் பிருதிவி, அப்பு, தேசு, வாயுவுகளுடன் சேர்ந்தது.

ஆகாசம் + வாயு = மனம்; ஆகாசம் + அக்னி = புத்தி
ஆகாசம் + அப்பு = சித்தம்; ஆகாசம் + பிருதிவி = அகங்காரம்.

+ என்னும் குறிக்கு சேர்ந்தால் என்றும் = என்னும் குறிக்கு ஆகிறது என்றும் அர்த்தம் என்றறிக.

வி௲: - வாயுவினின்று பிறந்தவை எவை? அவ்வரலாறு என்ன?

விடை: - வாயுவினின்றுண்டான்வை பஞ்சபிராணங்கள். அவை, ப்ராண, அபான, வியான, உதான, ஸாமான வாயுவுகள் என்பார்கள். வாயுவில் கால்பங்கு வியானவாயு வாயிற்று. வாயுவில் மற்றெரு கால்பங்கு மற்ற நான்கு பூதங்களுடன் கலந்தன.

வாயு + ஆகாசம் = ஸமான வாயு; வாயு + அக்னி = உதான வாயு;
வாயு + அப்பு = ப்ராணவாயு; வாயு + பிருதிவி = அபான வாயு

வி௲: - அக்னியினின்று எவை வுண்டாயின? எப்படி வுண்டாயின?

விடை: - அக்னியிலிருந்து உண்டானவை ஞான இந்திரியங்கள். அவை, சக்ஷு, சுரோத்ரம், த்வக்கு, ஜிஹ்வை, க்ராணம் என்பார்கள். அக்னியினின்றெரு பகுதி சக்ஷுவாயிற்று. மற்றேர் பகுதி, நின்ற நான்கு பூதங்களுடன் சேர்ந்து

அக்னி + ஆகாசம் = சுரோத்ரம்; அக்னி + வாயு = த்வக்கு
அக்னி + அப்பு = ஜிஹ்வை; அக்னி + பிருதிவி = க்ராணம் ஆயின.

வி௲: - அப்புவினின்றெவை பிறந்தன? அந்த விவரத்தை உரைக்க?

விடை: - அப்புவினின்றுண்டானவை பஞ்ச தன்மாத்திரைகள். அவை: சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்பார்கள். இவற்றையே உதகதத்வங்களென் பார்கள். அப்புவின் கால்பங்கு ரஸமாயிற்று. மற்றெரு கால்பங்கு நின்ற நான்கு பூதங்களுடன் சேர்ந்தது :

அப்பு + ஆகாசம் = சப்தம்; அப்பு + வாய் = ஸ்பர்சம்
அப்பு + அக்னி = ரூபம்; அப்பு + பிருதிவி = கந்தம் ஆயின

வி௲: - பிருதிவியினின்று எவை பிறந்தன? அவைவுண்டான வகை யுரைக்க.

விடை: - பிருதிவியினின்று பிறந்தவை கர்மேந்திரியங்கள், அவை, வாக்கு, பாணி, பாதம், பாயுவு, உபஸ்தம். பிருதிவியின் கால்பங்கு பாயுவாயிற்று, மற்றெரு கால்பங்கு நின்ற நான்கு பூதங்களுடன் சேர்ந்தது:

பிருதிவி + ஆகாசம் - வாக்கு; பிருதிவி + வாயு = பாணி
பிருதிவி + அக்னி = பாதம்; பிருதிவி + அப்பு = உபஸ்தம் ஆயின.

வி௲: - இவ்வாறு பஞ்சபூதமயமான ப்ரபஞ்சத்திற்கும் அதன்கண்ணிருக் கும் ஜீவன்களுக்கும் பேதம் உண்டோ? ஜீவன்கள் இப்பஞ்சபூதங்களினுல் உண்டாயி னவா?

விடை: - ப்ரபஞ்சத்திற்கும், அதிலிருக்கும் ஜீவராசிகளுக்கும் பேதம் உண்டு. இந்த ஜீவராசிகளின் சரீரம் பஞ்ச பூதங்களாலேயே ஆனது. இதிலிருக்கும் ஆத்மா சரீரத்தில் சாக்ஷியாயிருக்கிறது.

வினு: - இப்படிப்பட்ட ஜீவிகள் பூமியில் பிறப்பதெப்படி?

விடை: - அனுதியாய், ஆதிமத்யாந்தரஹிதமாய் இருந்த ஆத்மா, ப்ரமை யினுல், சரீரமே நித்யமென நிச்சயித்து செய்யும் கர்மா தூமாதி மார்க்கமாய் ஸோமஜனச்சேர்ந்து, க்ஷீணித்து, மழை வழியாக பூமியில் விழுந்து புஜிக்கும் வஸ்து க்களாகிய அந்நாதிகளாகி புருஷனுல் உட்கொள்ளப்படுகிறது. உண்ணப்பட்டது, குளிர்ச்சியினுல் மனத்திற்கு திருப்தியுண்டாக்கி ஸந்தோஷத்தைக் கொடுக்கின்றது. அன்ன உதக, ரஸங்களிலிருக்கும் சிக்கு சிரஸ்ஸிலிருக்கும் மூளையை விருத்தி செய்கிறது. அங்கிருக்கும் மனேமய கோசத்தில் அந்த: கரண வ்ருத்தி யென்னும் லட்சுமி யிருக்கின்ருள். அவள் ஜீவாத்மாவென்னும் நாராயணன்மேல் ஆசை கொண்டிருக்கிருள். அவ்வம்மைக்கு காமன் என்னும் மன்மதன் பிறக்கின்ருன். அப்படிப்பட்ட மனேபவனுன மன்மதனே லட்சுமிக்கு புத்திரனுகினுன், ஆகையால் அத்தகைய காமத்தினுல் ரேதோரூபமாய் புருஷனுக்கு சுக்கிலமென்றும், பெண்ணு க்கு சோணிதமென்றும் பெயர்கள்கொண்டு அன்னுதிகள் கர்ப்பம் ஆகின்றது. ஸ்த்ரீ புருஷர்கள் கூடியபோது சுக்கிலம், ருதுவான கமலத்திலிருக்கும் சுரோணிதத்துடன் கலந்து ஓர்வகைக் குழம்பாகின்றது. பதினைந்து நாட்களுக்கு அது கடினமான பிண்ட மாகிறது. பிறகு ஒரு மாதத்திற்குள் தலை ஏற்படுகின்றது. இரண்டாமாதக் கடைசியில் இரண்டு கைகள் உண்டாகின்றன. மூன்ருவது மாதத்தில் வயறு மாத்திரமே யிருக் கும். நான்காவது மாதத்தில் பாதங்கள் ஏற்படுகின்றன. ஐந்தாம் மாதத்தில் அவயவங் கள் ஏற்படுகின்றன. ஆறு மாதங்களானதும் நாடிகள் ஏற்படுகின்றன. ஏழுமாத மானதும் ஜீவன் உண்டாகிறது. எட்டாம் மாதத்தில் அறிவுண்டாகி, மனதில் வருத்தங்கொண்டு, இது ப்ராரப்தமென நினைத்துக்கொண்டு, எப்பொழுதிச் சிறையினின்று வெளிவருவோமென்று தவித்துக்கொண்டு, ஒன்பதாவது மாதக் கடைசியில் கருப்பையில் இருக்கமாட்டேனென வெளியுற்றுவிடும். இதுதான் மானிடன் ஜன்மமெடுத்தலின் சுருக்கமான வரலாறு.

இந்த ஜீவனுக்கு மூன்று பிறப்புகளுண்டென்பார்கள் பெரியோர். பரிசுத்தமில்லாத தந்தையின் வயிற்றினின்று அஸப்பியமான தாயின் கருப்பையில் புகுதல் ஒன்றும். தாயின் வயிற்றினின்று அவயவாதிகளுடன் பூலோகத்தில் பிரவேசித்தல் இரண்டாவது, அவ்வாறு தாயின் உதரத்திலிருந்து வெளிவந்து, பிறகு சிலநாட்களுக்கு உபனயனுதிகள் ஆனதும், தாய்தந்தையர் இறக்க அவர்களுக்கு ஈமக் கடன் செலுத்தி பரிசுத்தமாகின்ருன். தந்தை இறந்ததும் தந்தையின் பிராணனும் தன் பிராணனும் ஒன்ருகின்றமை மூன்ருவது ஜன்மத்தைப் பெறுகின்ருன்.

இவ்வாறு பிரம்மானந்தமாய் சீடர்கள் வினவுதலையும் விடைகொடுப்பதையும் கண்டு களித்துக்கொண்டிருக்கும் தன் குருவை நந்திகேசுரன் பணிந்து சுவாமீ! எனக்கு விடையளிப்பீர் - நான் போகவேண்டியிருக்கிறதென்றுரைத்து, பூமண்டலத் தில், ஹிமவத் பர்வதத்திற்கு தென்றிசையிலிருக்கும் கங்காநதியின் தெற்கில் சில

யோஜனைகள் தூரத்தில், கிழக்கு சமுத்திரத்திற்கு மேற்கில், க்ஷீரநதி (பாலாறு) வடக்கில் ஸப்தக்ஷேத்திரங்களில் ஒன்றாகிய காஞ்சீநகரத்திற்கு சமீபத்திலிருக்கும் வேதாசலமென்று பெயர்பூண்ட ருத்ரகோடி யென்னும் க்ஷேத்திரத்திற்கேசு வேண்டும் என்று சிவபிரானுரைத்தபடி, நந்திகேசுரன் வந்து, ருத்ரகோடியில் சிவனை பூஜித்து மோக்ஷமடைந்தனன்.

அநுபவம்.

முக்தியடையவேண்டியவர்கள் செய்யவேண்டிய கடமைகள் எவையென்று பெரியோர்களை வினவ அவர்கள் சொல்லியதென்னவென்றால்:

சூரியோதயத்திற் கு ஐந்து நாழிகைக்குமுன் தூக்கம் விட்டெழுந்து ஜலத்தால் வாயைக் கொப்பளித்து உமிழ்ந்து, முகம் துடைத்துக்கொண்டு, விபூதி யணிந்து சிவனைப் பிரார்த்தித்து துதிசெய்யவேண்டும். பிறகு ஜலமல விஸர்ச்சனங்களுக்காக தானிருக்கும் கிராமத்தின் எல்லையைத் தாண்டிச்சென்று வடக்காய்த்திரும்பி (இராப் பொழுதாயின் தென்திசையாய்த்திரும்பி) உட்கார்ந்து தலையையும், செவிகளையும் ஓர் வஸ்திரத்தால் சுற்றிக்கொண்டு மூக்கின் நுனியைப் பார்த்தவண்ணம் ஜலம விஸர்ச்செனம் பண்ணவேண்டும். (பாதைகளிலும், பள்ளங்களிலும், நீர்க்கரையிலும், குளங்களிலும், மாட்டுத் தொழுவங்களிலும், மயானத்திலும், பூங்காவனங்களிலும், மரத்தின் நிழல்களிலும், உழுதுள்ள வயல்களிலும், பசு மந்தைகள் நிற்கும் வெளி களிலும், பாம்பு புற்று முதலான இடங்களிலும் ஜலமல விஸர்ச்சனம் செய்யக் கூடாது,)

ஜலமல வாதைகளைத் தீர்த்துக்கொண்டானவுடன் ஓர்க் குளக்கரையைச் சேர்ந்து, ஜலத்திற்கு கொஞ்சதூரத்திற்சென்று, மண்ணையும் நீரையும் கலந்து சுத்திசெய்து துணியால் துடைத்து, முழங்கால் முழங்கைகளைக் கழுவிக் கொள்ள வேண்டும்.

பிறகு பல் தேய்த்துக்கொள்ளவேண்டும். கிழக்கு அல்லது வடதிக்கில் திரும்பி, குச்சியினாலாவது இலையினாலாவது அல்லது பற்பொடியினாலாவது வாயில் பல் வரிசைக்கு முன்பாகத்தில் உள்ளும் புறம்புமாகத்தேய்த்து, நாக்கையும் சுத்திசெய்து, ஜலத்தால் வாயைக் கொப்பளித்து, கையையும் காலையும் கழுவிக்கொள்ளவேண்டும். (நின்று கொண்டாவது, நடந்துக்கொண்டாவது, தேகத்தை வஸ்திரத்தால் போர்த்துக் கொண்டாவது படுத்துக்கொண்டாவது பல் தேய்த்தல் கூடாது.)

அதற்குப் பிறகு சுத்த ஜலமிருக்கும் ஏரியையாவது குளத்தையாவது கிணற் றையாவது அடைந்து, முதலில் ஜலத்தால் புரோக்ஷித்துக்கொண்டு (என்றால் முதலில் தலைமேல் தெளித்துக்கொண்டு), கங்காதேவதையைப் பூஜித்து, கௌபீன த்தை நனைத்து பிழிந்து தரித்து இரண்டு கைகளையும் கழுவி, வஸ்திரங்களைத் தோய்த்து, அவைகளைத்தரித்துக்கொண்டு, சரீரத்தைத் தேய்த்துக் கழுவி தொப்புள் வரைக்கும் நீரிலிறங்கி, நதியாயின் எதிர்முகமாய்த் திரும்பியும், குளம் கிணறுகள்

ஆனுல் கிழக்கு அல்லது வடக்கு முகங்களாக திரும்பியாவது நின்று கங்கையை தியானித்து ஸ்நானம்செய்யவேண்டும். ஸ்நானத்திற்கு பின்பு ஆசமினீயம்செய்து (அதாவது பகவான் திருநாமங்களைச்சொல்லி மூன்றுதரம் கையால் ஜலத்தையுட் கொள்வது, நான்காந்தரம் ஜலத்தை தாரைவார்த்து விடுவதும்) தேஹமுழுவதையும் உலர்ந்த வஸ்திரத்தால் துடைத்து, சுப்ரமான வஸ்திரத்தையும் கௌபீனத்தையும் தரித்துக்கொண்டு கைகளைக், கழுவிக்கொண்டு ஈரமான வஸ்திரங்களை யுலர்த்தவேண்டும். (சிரஸ்நானம் செய்வதற்கு முடியாதாயின் கண்டஸ்நானம். அதாவது, கழுத்து வரைக்கும் கழுவி துடைத்துக்கொள்ளுதல் செய்யவேண்டும். இது நோவினுல் பாதிக்கப்படுபவர்களுக்கு மாத்திரமே யேற்றது.)

ஸ்தானம்செய்து முடிந்ததும், கிழக்கு அல்லது வடதிக்கில் திரும்பி 'சிவ, சிவ ஓம் ஸத்குருவேநம:' என்றுரைத்து விபூதியால் வலதுகையின் மூன்று பெரிய விரல்களால் மூன்று ரேகைகளாத, சிரஸ்ஸிலும் நெற்றியிலும், மார்பிலும், தொப்புளிடத்தும், புஜங்களிடத்தும், முழங்கை முழங்கால், மணிக்கட்டு, முதுகு, கழுத்து, இடை இரண்டு பக்கம் ஆகிய (பதினுறு) இடங்களிலும் அணியவேண்டும். (இரண்டு பக்கங்களிலும் இடையிலும் அணிவதற்குப் பதிலாக இரண்டு செவிகளில் அணிவதும் ஓர் வழக்கம். மணிக்கட்டு முழங்கைகளை விட்டு பன்னிரண்டு ஸ்தானங்களில் மாத்திரமே அணிவதுண்டு. தேகமுழுமையும் சிலர் பூசிக் கொள்வா ர்கள்)

விபூதியை சிவமதஸ்தர் தங்கள் மதக்குறியாய் எண்ணுவார்கள். இவ்விபூதி யை தத்தம் மதத்திற்கேற்றபடி பிருதிவ்யாபஸ்தேஜோ, வாயுராகாசா, தீத்யாதி மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு எடுத்து இரண்டு கைகளால் சரீர முழுமையிலும் பூசி பிறகு சலத்தைச்சேர்த்து குழைத்து, தேகமுழுமையிலும் மும்மூன்று ரேகைகளாக குறுக்காய் அணிகின்றுர்கள். இத்தகைய விபூதி பாமர ஜனங்களுக்கு அறிவிப்பதென்ன?

சமஸ்கிருதபாஷையில் பசுவென்றேல்கோ. உபநிஷத்துளில் மனுஷனுதிய வனந்தகோடி ஜீவராசிகளையும் பசு வென்றுரைக்கப் பட்டிருக்கின்றது. இவற்றிற்கெல் லாம் பிரபுவான ஈஸ்வரஊ பசுபதி யென்பார்கள். கோமயமென்றுல் மனுஷ்ய னுடைய அஞ்ஞானம். கோமயவுருண்டைகளென்றுல் அநேகஜீவாத்மாக்கள். உருண்டைகள் வெயிலில் உலர்த்துவது ஞானுக்கினியினால் முதலில் ஜீவர்களின் ஆஞ்ஞானத்தை எறித்து பக்குவப்படுத்தல். இவ்வாறு உலர்ந்த கோமயவுருண்டை களை அக்கினிகுண்டத்தில் வைத்தல் ஜீவர்களுக்கிருக்கும் மிருகசேஷ்டைகள், பிரபஞ்சேந்திரிய வியாபாரங்களை யொழித்து, பிரபஞ்சவியாபகமாகும் அக்கினி யாகிய பரபிரம்மத்தை திரிகரண சுத்தியாய் தியானம் செய்தலாகின்றது. இவ்வாறு எரிக்கப்பட்ட வுருண்டைகள் முன்பிருந்த நிறம்மாறி பாலைப்போல் வெளுப்பதென் றுல் ஜீவர்களுக்கு பிராரப்த, சஞ்சிதாகம கர்மாதிகள் இல்லாமல் பரபிரம்மத்தில் ஐக்கியமாவதற்கு (அதாவது பிரமத்துடன் சேர்ந்து ஒன்றுய் விடுவதற்கு)த் தகுந்த நிலமையைப் பெறுதலாகின்றது. இத்தகைய விபூதியை சரீர முழுமையிலும் பூசுவதென்றுல் பரபிரம்மம் ஸர்வவியாபி, ஸர்வாந்தராத்மா என்பதை உணர்த்து வதாகின்றது. அவ்விபூதியை சலத்துடன் சேர்த்துக்குழைத்தல், பிரம்மம் பிரகிருதி

அல்லது சக்தியுடன் கலந்து இருக்கிறுனென்பதைக் காட்டுகின்றது இப்படிக் கலப்பதே பரபிரம்மத்தை பிரம்ம, விஷ்ணு, ருத்திரன் என்று சொல்லுதலும் அவர்களுக்குரிய காரியங்களாகும் ஸ்ருஷ்டி, ஸ்ததி சம்ஹாரங்களேத் தெரிவிக்கும் மூன்று ரேகை களாய் விபூதி அணிந்துக் கொள்வதாகின்றது. இம்மூன்று ரேகைகளும் த்ரேதாக்னி களேயும் திரிகுணுதிகளேயும் உணர்த்துகின்றன.

யோசித்துப் பார்க்குமிடத்து, இவ்விபூதியை யணிந்துக்கொள்ளுதல், ஜீவராசி களின் மெய்ந்நிலமை யறிதலேயும் மிருகஸ்வபாவமாகும் அஞ்ஞானத்தை போக்க டித்தலேயும். பரபிரம்ம ஸ்வரூபத்தையும், ஆத்மஸ்வரூபத்தையும், மோக்ஷம டையும் ஜீவாத்மாவின் ஸ்திதியையும் பிரம்ம ப்ரகுருதி ஸங்கமத்தையும், ப்ரபஞ் சத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதிலயங்களே திரிமூர்த்திகளின் வியாபாரங்களேயும் தெளி வாக்குகின்ற தென்னலாம். சொல்லுதற்கு இயலாத பரப்ரமஹமம் எல்லாவற்றையும் கடந்துள்ளதென்பதையும், ஆதிமத்யாந்தா ஹிரதமான தென்பதையும் குறிக்க வேண் டுமென்றுல் மூன்று ரேகைகள் ஒன்றுடன் ஒன்று கலக்காமல் அணிய வேண்டும்.

இவ்வாறு ஜலத்துடன் சேர்த்ங்க்குழைத்த விபூதியை மூன்று ரேகைகளாக யணிந்தபின்பு அவை உலர்வதென்றுல் மாயை (சக்தி அல்லது ப்ரக்ருதியினுடைய சேஷ்டை எவ்வளவு நேரமெது என்றும் நிஇனவுக்கு வரவேண்டு மென்பதை யறிவிக் கின்றது ப்ரஹமத்தில் சக்தி ஐக்கியமாகி 'ஏகமேவாத்விதீயம் பிரம்ஹா' என்று தெரிவிக்கின்றது. உலர்ந்தபின் பிரகாசமான வெண்ணிறமாய் இருப்பதால் விபூதியை பிரம்மமென்றேன் சொல்லலாகா தென்பதையும் உணர்த்துகின்றது.

இத்தகைய விபூதியை அவரவர் ஞானத்திற்கு தக்கவாறு அணிந்து கொண்டபின்பு தத்தம் நிலமைக்கு தகுந்தபடி கர்மானுஷ்டானங்களேச் செய்ய வேண்டும்.

அரி ஷட்வர்க்க கதை

அஞ்ஞான தேசத்திலிரு நாஸ்திகபுரத்தை மோஹாந்தகனென்னும் அரசன், லோபஸுரனென்னும் மந்திரியை வைத்து ஆண்டுகொண்டிருந்தனன். குரோதேந்தி ரன் என்னும் ராஜசபைபண்டிதன் மாத்ஸரியமென்னும் சிஷ்யனுடன் ராஜனுல் அளிக்கப்பட்ட இனும் நிலங்களேயுடையவனுய் வாழ்ந்துகொண்டிருந்தான். மிகவும் கீர்த்தியையும் அநேகவிருதுகளேயும் காமயாசாரியன் என்னும் பண்டிதன் தன் சிஷ்யன் மதோன்மத்தனுடன், இப்பெயர்பெற்ற நாஸ்திகபுரத்தை யடைந்து, அரசஇனத் தரிசித்து தன் வல்லமையைவெளியிட்டான். அதர்க்கு அரசன் இந்தகரை வர்ணித்து நூறு செய்யுள்கள் இயற்ற கட்டஇளயிட்டவளவிலே, தன் சிஷ்யஞன மதோன்மத்தஇன யவற்றை யெழுதச்செய்து சபைக்குகொணர்ந்ததும், குரோதேந்தி ரன் என்னும் ஆஸ்தான பண்டிதன் தான் அவற்றை வாசிப்பேன் என்று அரசனு க்குரைத்து அவன் உத்தரவுபெற்று வாசித்தவளவில், ஒரு செய்யுளில் ஹம்ஸ்பாத ங்களால் அப்பக்கத்திற் நான்காம் பக்கத்தில் அந்த பதங்கள் இருப்பதை யறியாமல் அப்பண்டிதஇனக்கேட்டறிந்து பூர்த்திசெய்து ராஜஇனயும் ராஜஸபையையும் சந்தோஷ

ப்படுத்தினுன். லோபேசன் என்னும் மந்திரியின் ஆலோசனையால் மறுநாள் அப்பண்டிதனுக்கு பரிசளிக்கும்படி கட்டளையாயிற்று. அப்பொழுது, ராஜ ஸபை பண்டிதன் அம்பட்டனையழைத்து தலையை மொட்டையடித்துக்கொண்டு மத்தியில் நான்கு கேசங்களை மாத்திரம் விட்டுவிட்டு, அக்களத்திலிருக்கும் மயிரை சற்றிலும் எடுத்து மத்தியில் குடுமியைப்போல் விட்டுக்கொண்டு ராஜ ஸபைக்கு வந்தனன். அப்பொழுது சன்மானம் பெறவந்த புதிய பண்டிதனுமங்குற்ருன். அப்பொழுது குரோதேந்திரன் அப்பண்டிதனுக்குத் தன் தலையைத் தடவிக்காட்டி தன் அக்களத்தையும் தடவிக்காட்டினுன். தலையிலிருக்க வேண்டிய குடுயை அக்களத்தில் வைத்துக் கொண்ட காரணமென்னவென்று கேட்டவளவில், க்ஷௌரம் செய்துக் கொள்ளும் பொழுது மறந்து குடுமியை எடுத்துவிடும்படிச் சொன்னேன். பிறகு எனக்கு நினைவு வந்து அவ்விடத்து சில கேசங்களைவிட்டு அக்களத்தில் குடுமியைப்போல் ஏற்படுத்தும்படியுரைத்தேன் என்றனன். அப்பண்டிதன் தலையை குனித்துக்கொண்டுபோக முயலுகையில் ராஜன் அவனைச் சாந்தப்படுத்தினுன். பரிசின் விஷயமாய் அவரைக் கேட்கவே வெளியே போய்வருகிறேன் என்றுரைத்து சென்று விட்டனன்.

மங்களம்கோஸ லேந்திராய மஹனீயகு ணுப்தயே
சக்ரவர்த்திதனேஜாய சார்வபௌமாய மங்களம்.
ஓம் சாந்திச் சாந்தி சாந்தி:
ஹரி: ஓம்.

இதை வாசிக்கும் பெரியோர்க்கோர் விண்ணப்பம்:

இது பண்டிதர்களால் பரிசோதிக்கப்பட்டதாயினும் சிற்றறிவினேன் முதல் முயற்சியாதலின் இதன் கண்ணிருக்கும் பிழைகளைப்பொருத் தெளியேனை மன்னிப்பீர்.

இப்படிக்கு,
மன்ய வெங்கடராமய்யா.

கீழ்கண்ட விலாஸத்தில் இப்புத்தகம் கிடைக்கும்.

மன்ய. வெங்கடராமய்யா,
10, கிருஷ்ணய்யர் தெரு
ஜார்ஜ்டவுன், சென்னை.